திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சிரணியின் மூலம் இத்தகைய நிழற்குடைகள் அமைக்கப்படுவதால் மிக உறுதியாகவும் சிக்கனமாகவும் அவை காணப்படுவதால் ஏனைய நகரங்களிலும் இத்தகைய நிழற்குடைகள் சிரணியினர் மூலம் அமைத்துத் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்த 48 நிழற்குடைகளும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பிறந்தநாளையொட்டி அமைக்கப்பட்டன. இதற்கான செலவு அரசாங்கப் பணமல்ல, தனிப்பட்டவர்கள் கொடுத்த நன்கொடைகள் மூலமாக அமைக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் இதே போன்று மற்ற நகரங்களுக்கும் அமைப்பது என்பதுதான். அப்படியென்றால் நன்கொடைகள் மூலம் அமைக்க அவர்களும் துணை நின்றால் அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வருகின்ற 49-வது பிறந்த நாளையொட்டி மாயூரம் நகரில் தனியார்கள் நன்கொடைகள் மூலம் நிழற்குடைகள் அமைக்க முன்வரும்பொழுது அதற்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதை மிக மகிழ்ச்சியோடு வரவேற்று அதற்கு ஆவன செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரசாங்க வேலைகள் சிலவற்றை சிரணியின்மூலமாகச் செய்வதால் அரசாங்கம் தனியாகச் செய்வதால் ஆகின்ற செலவினைவிட அதிகமாகச் செலவாகின்றது என்று சொல்லப்படுகிறதே, அப்படியானால் தனியாகவே அரசாங்கமே செய்யலாமே, அப்படிச் செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் நடைமுறையில் இருப்பதற்கு நேர்மாறாகச் சொல்கிறார்கள். அரசாங்கம் செய்வதைவிட சிரணி மூலமாக மேற்கொள்ளப்படும் வேலைகளுக்குச் செலவு குறைகிறது என்று திட்டவட்டமாகப் பலமுறை எடுத்துக் கூறப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு நான் மீண்டும் கொண்டு வருகிறேன்.

Strike in power-loom unit at Madurai

* 408.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether 1000 workers in Power-loom factories in Madurai went on strike for wage increase from 4th September 1971; and

(*b*) if so, whether any settlement has been reached?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

1971 டிசம்பர் 15]

பஞ்சாலைத் தொழிலாளர் திராவிட முன்னேற்ற சங்கம் மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், மதுரை மாவட்டக் கூட்டு பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுக்கும் மதுரையில் சுமார் 1,000 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 146 விசைத்தறிப் பிரிவுகளின் நிர்வாகத்தினருக்கும் இடையே கீழ்க்காணும் பிரச்சனைகள் குறித்து தொழிற் தகராறு ஏற்பட்டது :—

(1) பல்வேறு வகைத் தொழிலாளர்க்கு இடைக்காலத் துயர் தணிப்புத் தொகை கொடுக்கவேண்டும்.

(2) மொத்த ஊதியத்தில் 20 சதவீதத்தைப் பூரிப்பு ஊதியமாக கொடுக்க வேண்டும்.

(3) தேசிய பண்டிகை விடுமுறைகள் சட்டத்தைச் செயல் படுத்துதல், தற்செயல் விடுப்பு அளித்தல் ஆகியவற்றை நிறை வேற்ற வேண்டும்.

(4) தொழிலாளர் சட்டு அதிவருங்கால வைப்புநிதிச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

இக்கோரிக்கைகள் குறித்து மதுரை, தொழிலாளர் நல அதிகாரி-1 முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக் கையில், தொழிலாளர்கள் 2—9—1971 முதல் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர்.

(இ) ஆம், ஊதியங்களைத் திருத்தியமைப்பது தொடர்பான பிரச்சினை குறித்து மதுரை, தொழிலாளர் நல ஆணையர்-1 முன்பு 25—9—1971 அன்று 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் உடன்பாடு ஏற்பட்டது.

அரசு அச்சகத்தொழிலாளர்களுக்கு நிகராடை

*409 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீர் உடை வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருவள்ளுவர் ஆண்டு

*** 410 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் ஆண்டினை அரசாங்கம் பதிவேடுகளிலும் பழக்கத்தில் கொண்டு வர அரசு ஆணை பிறப்பிக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.